எண். 107 / 2025 நாள்: 31.07.2025

**தமிழ் நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்**

**எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை - 600 003**

**செய்தி வெளியீடு**

ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் (பட்டயம்/தொழிற்பயிற்சி நிலை) (அறிவிக்கை எண். 11/2024 நாள் 13.08.2024 மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்) தேர்வில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான நான்காம் கட்ட **மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு** ஆகியன தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், எண்.3, தேர்வாணையச் சாலை, (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) சென்னை - 600 003-ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

| | |
|---|---|
| நான்காம் கட்ட **மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு**<br>நாள் : 12.08.2025 | தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) (பதவிக் குறியீடு 3550), திட்ட உதவியாளர் நிலை-ஆ (பதவிக் குறியீடு 3484), இளநிலை வரைதொழில் அலுவலர் (பதவிக் குறியீடு 3115), இளநிலை வரைதொழில் அலுவலர் (பதவிக் குறியீடு 3120), தொழில்நுட்ப உதவியாளர் (பதவிக் குறியீடு 3379), தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) (பதவிக் குறியீடு 3549) |
| நான்காம் கட்ட **மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு**<br>நாள் : 12.08.2025 | தொழில்நுட்பவியலாளர்(இயக்கம்) (பதவிக் குறியீடு 3329), தொழில்நுட்பவியலாளர் (கம்மியர் தானியங்கி) (பதவிக் குறியீடு 3325), தொழில்நுட்பவியலாளர் (குளிரூட்டல்) (பதவிக் குறியீடு 3330), வரைவாளர் நிலை III (பதவிக் குறியீடு 2114), தொழில்நுட்ப உதவியாளர் (பதவிக் குறியீடு 3381) |

தேர்வர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண்/இடஒதுக்கீட்டு விதி / காலிப்பணியிடங்களின் அடிப்படையில் மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் தற்காலிக தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக் குறிப்பாணையினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in – லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E-mail மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்கள் எழுத்துதேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப மேற்படி பதவிகளுக்கான தெரிவு மேற்கொள்ளப்படும். எனவே, மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பணி நியமனம் வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்வர்கள் மேற்படி மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வரத் தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ச. கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப.,
செயலாளர்